**சார்பு நீதிமன்றம், திருவொற்றியூர்**

**O.S. No. 25 / 2022**

இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியின் வாக்குமூலம் 04.10.2023 ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

பெயர் Selvaraj (PW 1)

வாதி தரப்பு சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் செய்யப்படும் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. பி அட்டவணை சொத்தான 1262 சதுரடி நிலம் எனக்கு சொந்தமானது என்பதை நிருபிக்கும் வண்ணம் நான் எந்த விதமான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. 1ம் பிரதிவாதி பிளாட் எண் 19ல் தெற்குபகுதியில் 1262 சதுரடி நிலத்தை வாங்கிய விவரம் எனக்கு தெரியாது. பிளாட் எண் 19யை நான் சகாதேவனிடமிருந்து கிரையம் பெற்றேன். அதன் விஸ்தீரணம் 2500 சதுரடி ஆகும். ஜடாமுனியிடமிருந்து சகாதேவன் அந்த சொத்தை கிரையம் பெற்றார். பிளாட் எண் 18ன் விஸ்தீரணம் 2280 சதுரடி ஆகும். பிளாட் எண் 18 மற்றும் 19 ன் விஸ்தீரணம் 4780 சதுரடி என்றால் பிளாட்டின் விஸ்தீரணம் மேற்சொன்னதாகும். ஆனால் பிளாட் எண் 18 செல்வதற்கு 10 அடி அகலம் 85 அடி நீளம் பாதை விடப்பட்டு அதையும் சேர்த்து தான் கிரையம் செய்யப்பட்டதாக சாட்சி கூறுகிறார். மேற்சொன்ன விவரங்களை என்னுடைய தாவாவில் நான் கூறவில்லை என்றால் சரியல்ல.

2. 1ம் பிரதிவாதி கடந்த 19.03.1999 அன்று பிளாட் எண் 19 ஆன 1262 சதுரடி நிலத்தை கிரையம் பெற்றார் என்று சொன்னால' அது பற்றி எனக்கு தெரியாது. 2500 சதுரடியில் 1262 சதுரடி போக மீதமிருந்த நிலத்தை 2ம் பிரதிவாதி அவர் கைவசம் வைத்திருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றதற்கு பிறகு மீதமிருந்து சொத்தை தான் நான் வாங்கியுள்ளேன் என்று சொல்வது தவறு. நான் 27.03.2000 அன்று தான் பிளாட் எண் 18 மற்றும் 19 யை கிரையம் பெற்றேன். என்னுடைய கிரைய பத்திரமான வாதசாஆ 1 அட்டவணை சொத்தில் மொத்தம் 5586 சதுரடி மட்டும் தான் கிரையத்திற்கு உட்படுத்தப் பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதசாஆ 1க்கு முந்தைய தாய் பத்திரங்களில் 5586 சதுரடி என்று குறிப்பிடவில்லை என்றால் அந்த ஆவணங்களில் பொது வழிப்பாதையின் விஸ்தீரணம் குறிப்பிடப்பட்டுள்ளதாக சாட்சி கூறுகிறார். வழிப்பாதை 10 x 85 - 850 சதுரடி ஆகும்.

3. வாதசாஆ 1ல் பிளாட் எண் 18க்கு செல்வதற்கு தனிவழிப்பாதையாக 10 x 85 - 850 சதுரடி இடம் ஒதுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடவில்லை. முந்தைய ஆவணமான தாய்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சாட்சி கூறுகிறார். அந்த ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தற்சமயம் சுமார் 400 சதுரடி அளவில் உறாலோ பிளாக் மூலம் வீடு கட்டி வசிதது வருகிறார் என்றால் சுமார் 150 சதுரடியில் வீடு கட்டி வசித்து வருகிறார்கள் என்று சாட்சி கூறுகிறார். கட்டுமான பணியை தொடரும் போதே அதனை எதிர்த்து போலிசில் புகார் கொடுத்ததாக சாட்சி கூறுகிறார். 1ம் பிரதிவாதி மின்இணைப்பு மற்றும் எரிவாயு இணைப்பு பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி 1262 சதுரடி நிலத்தை முள்வேலி மூலம் காம்பவுண்ட் கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான்.

4. நான் தகராறு செய்ததால் எனக்கு எதிராக கடந்த 25.06.2014 அன்று மாதவரம் பால்பண்ணை காவல் நிலையத்தில் 1ம் பிரதிவாதி எனக்கு எதிராக ஒரு புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்னும் மேற்சொன்ன புகாரின் பேரில் போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. வாதசாஆ 2 பட்டாவை ரத்து செய்யக்கோரி 1ம் பிரதிவாதி கடந்த 03.07.2014ல் மாதவரம் வட்டாட்சியரிடம் ஒரு புகார்மனு அளித்துள்ளார் என்றால் சரிதான். அதன் பேரில் நான், 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் மூவரும் விசாரணைக்கு ஆஜரானோம் என்றால் சரிதான். அதன் பேரில் 26.12.2014 அன்று எனக்கு அளித்த பட்டாவை வட்டாட்சியர் ரத்து செய்துவிட்டார் என்று சொல்வது தவறு. ஆர்டிஓ விசாரணைக்கு வட்டாட்சியர் பரிந்துரைத்தார் என்று சாட்சி கூறுகிறார். அதற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வது தவறு என்றும் ஏற்கெனவே வட்டாட்சியர் எனது பட்டாவை ரத்து செய்துவிட்டார் என்றால் சரியல்ல.

5. 2ம் பிரதிவாதி என்னுடைய நண்பர் என்ற காரணத்தினால் 1ம் பிரதிவாதிக்கு ஏற்கெனவே விற்ற சொத்தை அறிந்து கொண்டு நானும் அவரும் சேர்ந்து வாதசாஆ 1 கிரைய பத்திரத்தை தவறுதலாக தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. ஆகையால் இந்த வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Typed before me in the Open Court read over to the witness in Tamil and admitted by the witness to be correct.

M VASANTHA KUMAR

Digitally signed by M VASANTHA KUMAR
Date: 2023.10.04 16:20:39 +0530

Subordinate Judge,
Thiruvottiyur.